# பாவம் போக்கும்

பஞ்சாமிர்தம் 1.

# முகவுரை

---

தேன், சர்க்கரை, பலாக்கனி, மாங்கனி, வாழைக்கனி என்ற இவ்வைந்தும் கலந்ததற்கே பஞ்சாமிர்தம் என்போம். இப்பஞ்சாமிர்தத் தொகுதியும் அஃது போன்றதே. பஞ்சாமிர்த மெனினும் கொஞ்சம் புசித்தால் தான் ருசி தெரிய வரும். ஆகையால் ருசி பார்மின்.

மேற்படி தொகுதியின் பாற்பட்டது 'பாவம் போக்கும்' என்ற நூல் அதாவது பாவம் போக வழிகாட்டும் நூல். ஏனெனில் நாம் பாவத்தில் பிறந்தவர்கள், பாவத்தைச் செய்தவர்கள், பாவத் தைச் செய்கிறவர்கள், பாவத்தைச் செய்பவர்கள். பாவிகளுக்கு பரலோகில் பங்கு கிடையாது. பரம கடவுளை அண்ட முடியாது. பாவத்தின் பலனே நரகம். ஆகையால் பாவம் போக வேண்டும். பரிசுத்தம் அடைய வேண்டும். அப்போது ஆத்மா நிம்மதியடையும். வாழ்க்கை இன்பமாகும். மறுமை ஆசிகளும் மருவும். அதற்கு இந்நூல் வழி காட்டும். எல்லாம் வல்ல இறைவனது ஆசி இந்நூலுட னிருப்பதாக.

---

## அட்டவணை


| | | | |
|---|---|---|---|
| | | | பக்கம் |
| 1. | கஷ்டப்பட்ட துஷ்டப் பையன் | .... | 3 |
| 2. | கொற்றன் பெற்ற களிப்பு | .... | 10 |
| 3. | செம்மானின் சந்தோஷம் | .... | 15 |
| 4. | வெட்டு ஒன்று துண்டு இரண்டு | .... | 23 |
| 5. | மனமாறிய மகன் | .... | 26 |

# பாவம் போக்கும்

## 1. கஷ்டப்பட்ட துஷ்டப் பையன்

சீமை தேசத்திலே சிறு பையனொருவனிருந்தான். அவன் வீடு வாசல் சிநேகிதர் ஒருவருமின்றி அலைந்து திரிந்தான். பாலியப்பருவ முதல் வாலிப வயதுவரை துக்க சாகரத்தில் மூழ்கினவனானான். கடைசியில் கள்ளர்களுக்குத் தோழனானான். சோர்வும் பயமும் அடிக்கடி அவனை நற் காரியங்களைச் சிந்திக்கச் செய்தும், அவனது பசி, கைவிடப் பட்ட நிலைமை, தனியே யிருத்தல் யாவும் ஒருங்கு கூடி அவனைத் துஷ்டருக்கு அடிமையாகச் செய்தன.

குளிரும் காரிருளும் மிகுந்த ஒரு நவம்பர் மாதம் ஓர் இரவில் இவன் திருட ஆயத்தமானான். களவு செய்யக் குறிப்பிட்ட காலமாகவில்லை. ஒரு வீட்டில் அன்றிரவு களவு செய்வதற்கு உத்தேசித்திருந்தனர். கனத்த மேகங்களை ஊடுருவிக் கடந்து சந்திரன் ஊடே ஊடே பிரகாசித்தது. அதனால் கள்ளர்கள் அஞ்சி எங்கும் காரிருள் மூடக்காத்திருந்தார்கள்.

சந்திரனோ வரவரப் பிரகாசமாய் ஜொலித்தது. அதன் ஜோதியால் இவன் ஒளித்துக் கொண்டிருந்த வீட்டின் முன் பாதையில் ஒரு நிழலைக் கண்டான். உடனே அவன் மனம் பயத்தினால் பதை பதைத்தது.

யாரோ ஒருவன் அங்கே யிருக்கிறான்! ஒருவேளை தன்னை விசாரிக்க வேறு கள்ளன் வந்திருக்கிறானோ? அல்லது போலீசார் துப்பறிந்து வந்திருக்கிறார்களோ? என எண்ணி நடுக்கமுற்றான்.

ஆயினும் அப்படியொன்றுமாகவில்லை. பட்சமுள்ள குரலொன்று கட்டளையிடும் தொனியில் பின்வருமாறு வினவக்கேட்டான். ஓ பையனே! நடுச்சாமம் இவ்விருட்டு வேளையில் இங்கு யாது செய்கிறாய்? வீட்டுக்குப்போய் படுத்துக்கொள். உன்னைப்போலொத்த பையன்களுக்கு இந் நேரம் தெருவில் என்ன ஜோலி? என்பதே. பையன் இவை களைக் கேட்டும் அசையாது நிற்கவே, வீட்டுக்குப்போ என்ற சொற்கள் திரும்பவும் காதில் விழுந்தன. இப்பையனோ, நான் போக எனக்கு வீடுமில்லை, படுத்துக்கொள்ளப்படுக் கையுமில்லை என அச்சத்துடன் பதிலுரைத்தான். பேசிய குரலோ, "ஏழைப் பையனே என்று பரிதாபத்துடன் கூறி, நான் உனக்கு ஒரு வீட்டையும் படுக்கையையும் ஏற்படுத்திக் கொடுத்தால் நீ அங்கே போவாயா என்று வினவ, அவன் சந்தோஷத்தோடு போவேன் என்றான்."

அச்சமயம் வடகீழ்க்காற்று அவனது நடுக்க முற்ற உடலில் வீசினது. ஆகாயத்திலுள்ள மேகங்களையும் ஓடச் செய்தது. நிலாவெளிச்சம் பேசிய அன்பரின் முகத்தில் பிரகாசிக்கவே, பையன் அவரது புன்சிரிப்பைக் கண்டான். அவர் முகவொளி நிலா வெளிச்சத்திலும் அதிகமாய்ப் பிர காசித்தது. குளிருற்ற அவன் உடலுக்கு அது அனலூட்டியது. அவர் பையனுக்கு ஒரு தெருவின் பெயரையும் வீட்டின் இலக்கத்தையும் சொன்னார்.

அவன் அதைக் கேட்டு விரைந்தோடினான். அவர், தம்பி இங்கே வா என்று அவனைத் திரும்பவும் கூப்பிட்டார்.

அவன் வந்ததும் வீட்டுக்குள்ளே நீ எப்படிப் பிரவேசிப்பாய்? உன்னை ஏற்றுக்கொள்வார்களா? அனுமதிச் சீட்டு இருந்தால்தானே உன்னை ஏற்றுக்கொள்வார்கள்? ஆகையால் இச்சீட்டை எடுத்துக்கொள். இதை உனக்கு வாசிக்கத் தெரியுமா? என்று கேட்டார்.

பையனே, எனக்கு வாசிக்கத் தெரியாது, நான் ஒரு நாளும் படித்ததில்லை என்று துக்கத்துடன் மொழிந்தான்.

சரி இந்த அனுமதிச் சீட்டில் யோவான் மூன்று பதினாறு என்று எழுதியிருக்கிறதை மறவாதே. எனக்குப் பின்னாகச் சொல்லு, யோவான் மூன்று பதினாறு என்று பெரியார் சொல்ல, அவன் ஆவலோடு அவருக்குப் பின் சொன்னான்.

இதை நீ மறவாதே, இது உனக்கு வீடும் படுக்கையும் கொடுத்து, உனக்கு நன்மை செய்யும் என்று கூறி அவனை யனுப்பினார்.

அச்சிறுவன் அதைப் பெற்றுக்கொண்டு, ஓடினான். அவனுக்குக் கற்பித்த வாக்கியத்தை இடைவிடாது சொல்லிக்கொண்டு குறுமூச்சோடு குறித்த வீட்டை யடைந்தான். யோவான் மூன்று பதினாறு என்ற வாக்கியம் அவனுக்கு வீடும், படுக்கையும் கொடுத்து, அவனுக்கு நன்மை செய்யுமென்பதாக ஒரு இரக்கமுள்ள நண்பர் சொல்லவில்லையா? அதனால் அவன் பயமின்றி அவ் வீட்டின் மணியை அடித்தான்.

உடனே அவ்வீட்டான் கதவைத் திறந்து கொண்டு முரட்டுத் தொனியில், யார் அங்கே என்று கேட்க, இப் பையன், ஐயா, தயவு செய்யும். நான் யோவான் மூன்று பதினாறு, ஐயா, என்றான்.

சரி இன்றுள்ள வாக்கியம் அதுதான், உள்ளே வா என வீட்டாள் விளம்பினது. ஏழைப் பையனுக்குச் சிறிது நேரத்தில் அறுசுவை உண்டியும் ஒரு சொகுசான படுக்கையும் கிடைத்தன. இரவின் குளிரினின்றும் கெட்ட தோழரினின்றும் காக்கப்பட்டதிற்காக, நன்றியினால் நிறைந்து

உள்ளம் பொங்கி இடைக்கிடையே யோவான் மூன்று பதினைறைச் சொல்லி இது எனக்கு இவ்வளவு நன்மை செய்யுமானால், நான் எப்போதும் யோவான் மூன்று பதினாறாகவே யிருப்பேன் என்று பலவாறாக யெண்ணி அயர்ந்த நித்திரை செய்தான்.

காலை வரையில் தூங்கினான். எழுந்த பின் தனது புதிய நாமத்தால் தனக்குக் கிடைத்த வீடு, சாப்பாடு, படுக்கை இளைப்பாறுதல், முதலியவற்றை நினைத்து, போக மன மில்லாமல் அவ்விடத்தை விட்டுப் போனான்.

சிறிது நேரத்தில் மறுபடியும் வீதிகளில் திரிந்தான். திரும்பவும் அவனைக் கெட்ட தோழர்கள் தங்கள் பக்கத்தில் இழுத்தாலும் இழுக்கலாம். ஆயினும் சகலத்தையும், 'ரட்சிக்கக்கூடிய மகத்துவமுள்ள கரம்' அவனைப் பாவக் குழிகளினின்று இரட்சித்தது. எப்படி யென்றால், அதிக நெருக்கமுள்ள ஒரு வீதியை இவன் கடக்க முயலுகையில் ஒரு வண்டி இவனை மோதி இவன் மேலே ஏறவே, உடனே பக்கத்திலுள்ள ஒரு வைத்திய சாலைக்குக் கொண்டு போயினர்.

அங்கே அவனை ஒரு அறையில் வைக்குமுன் நீ யார் என்று கேட்டார்கள்.

இவனோ, நான் யோவான் மூன்று பதினாறென்று சொன்னான்.

நல்லது, இவன் அதிகக் காயமடைந்திருக்கிறான். யோவான் மூன்று பதினாறோ அல்லது அவன் யாரோ? காரியமில்லை, அவனை உள்ளே கொண்டு போங்கள். ஏழைப் பையன் எனப் பரிதாபத்துடன் வைத்தியசாலைத் தலைவர் கூறினார்.

அங்குள்ள மனிதர்கள் அவனைத் தாங்கிக் கொண்டு வந்து, பத்திரமாய் ஒரு அறையில் வைத்து, வைத்தியர் வருமளவும் அவன்மேல் கண்ணேக்கமாயிருந்தார்கள். அவனே அப்படுக்கையிலிருக்கும் சமயத்தில் அடிக்கடி என் புதிய நாமத்தினுல் நான் எவ்வளவோ அதிர்ஷ்ட சாலியாயிருக்கிறேன். இனி எப்போதும் யோவான் மூன்று பதினுறையே தரித்துக் கொள்வேன். என்று தனக்குள்ளே அமைதலாய்ச் சொன்ஞன். ஆயினும் சிறிது நேரத்திற்குள்ளாக நோவினுல் சகலத்தையும் மறந்தான். காய்ச்சலுண்டாகி மெய்மறந்து வாய் குழறிப் பேசினுன். என்ருலும் அந்த இரவு முழுவதும் இடைக்கிடையே யோவான் மூன்று பதினுறு எனக்கு நன்மை செய்யும் என்ருர், அப்படியே செய்திருக்கிறது என்று திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டிருந்தான்.

அதனுலே அந்த அறையிலுள்ள அநேக வியாதியஸ்தர்கள் அவ்வசனங்களைக் கேட்டு, தங்கள் அருகிலிருந்த வேதநூலைப் பெலனற்ற தங்கள் கையாலெடுத்துத்திறந்து, அடிக்கடி அவன் சொல்லிய அவ்வசனம் என்னவென்று அறிந்தார்கள். அன்பான கடவுள் அன்றிரவு அதை அநேக ஆத்துமாக்களுக்கு ஆசீர்வாதமாக்கினுர். ஏனெனில் அது தேவனுடைய வசனமல்லவா? தமது வசனம் வெறுமையாய்த் திரும்பாதென்று அவர் வாக்களித்திருக்கிருரே.

ஓ, தேவனுடைய வசனம் பொய்யுரையாதென்பது எவ்வளவு உண்மை. அவர் வாக்கு ஒரு நாளும் மாருதே. அவர் வசனமே என்றென்றைக்கும் நிலைக்கும். அதைச் சோதித்துப் பார். அவரை ருசித்துப் பார். அவரை நம்பு.

நேரஞ் சென்றது. சிறுவனே விழித்தான். கன நித்திரைக்குப்பின் விழிப்பதுபோல, அங்கும் இங்கும்

விழித்துக்கொண்டிருந்தான். அநேகர் கண்கள் அவனை நோக்கின. கடைசியில் இவனருகில் படுத்திருந்த நோயாளியொருவன் இவனை நோக்கி, யோவான் மூன்று பதினாறே, நீ எப்படி யிருக்கிறாய் என்று கேட்டான்.

இவனோ மிக ஆச்சரியத்தோடு, "என் பெயர் உனக்கு எப்படித் தெரியும்? என்க, மற்றவன், எப்படித் தெரியும் என்று கேட்கிறாய், கடந்த இரவு முழுவதும் ஓயாமல் அதை எங்களுக்குச் சொல்லிக்கொண்டே யிருந்தாயே, யோவான் மூன்று பதினாறே, ஆண்டவர் உன்னை ஆசீர் வதிப்பாராக, என்றான்.

இதைக் கேட்டவுடன் அவன், எனக்குப் புதுப் பெயர் கிடைக்குமுன் வீதிகளில் அகதியாய்ச் சுற்றித்திரிந்த என்னை, ஒருவரும் விரும்பாத என்னை, ஆண்டவர் ஆசீர் வதிப்பாராக என்று சொல்ல நேரிட்டதே என நினைத்து ஆச்சரியப்பட்டான்.

வல்லமை நிறைந்த அவ்வசனம் என்னவென்று கேட்டால் *தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ, அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார் என்பதே.

அப்பையன் முதற் தடவையாகக் கேட்ட அந்த ஜீவ வசனத்தின் மூலமாய் அநேகர் நித்திய ஜீவனை அடைந்தார்களென்று கேட்டதும் இப்பையனும் இயேசு ரட்சகரை விசுவாசித்து நித்திய ஜீவனைப் பெற்றுக்கொண்டான்.

---

* யோவான் 3 : 16.

சிறு வயது முதற்கொண்டு கள்ளரின் தோழனாகத் திரிந்து, பாவச் செய்கையிற் பழகி, நரக ஆக்கினைக்குப் பாத்திரனான அந்தப் பையனை இயேசுநாதர் இரட்சித்தார். அவர், அவனை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கவில்லை. அவனை ரட்சித்தார்.

*உலகத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கும்படி தேவன் தம்முடைய குமாரனை உலகத்தில் அனுப்பாமல், அவராலே உலகம் ரட்சிக்கப்படுவதற்காகவே அவரை அனுப்பினார்.

---

* யோவான் 3 : 17.

## 2. கொற்றன் பெற்ற களிப்பு

கொஞ்சக் காலத்துக்கு முன் ஒரு அம்மாளிருந்தாள். அவள் கடவுளின் ஊழியத்திற்கென்று கொஞ்சப் பணம் கொடுப்பதற்குப் பெரிதும் விரும்பினாள். ஏனெனில் அவர் அவளுக்கு அதிக நன்மைகள் செய்திருந்தார். மிகவும் முக்கியமான இந்த விஷயத்தைக் குறித்துத் தேவ நடத்துதலுக்காக அதிக ஊக்கமாய் ஜெபித்தாள். கடைசியில் அவள் பல வேதப் புத்தகங்களை விலைக்கு வாங்கவும், வேதப் புஸ்தகமில்லாத யாரைக் கண்டாலும் அவர்களுக்கு இனாமாக ஒன்றைக் கொடுக்கவும் தீர்மானித்தாள். அப்படியே பல வேதப் புஸ்தகங்களை விலைக்கு வாங்கினாள்.

ஒரு நாள் அவள் ஒரு பையில் அநேக புஸ்தகங்களைத் தெருவழியே கொண்டு போகையில் தேவனுக்கென்று செய்யும் இவ்வூழியத்தை அவர் வழி நடத்துமாறு வேண்டுதல் செய்தாள். யாதொரு நோக்கமுமின்றி ஒரு தெருவில் திரும்பினாள். கொஞ்சத் தூரத்தில் ஒரு கொற்றன் சுவர் ஒன்றைக் கட்டிக்கொண்டிருந்தான். அவனிருந்த இடத்திற்கு அவள் வந்தபோது சிறிது நேரம் நின்று மலர்ந்த முகத்துடன் அவனுடன் சம்பாஷிக்கலானாள். இதுவரை சொந்தமாக அவனுக்கு ஒரு வேதப் புஸ்தகமில்லை யென்பதை அச்சம்பாஷணையின் மூலமாயறிந்தாள். உடனே வாங்க அவனுக்கு மனமில்லாதபோதிலும் அன்போடும் ஆசையோடும் அவள் கொடுத்த விதமானது, அவனை ஏற்றுக்கொள்ளும்படி செய்தது. தன் பெயரை வேதப் புஸ்தகத்தில் எழுதவும் சம்மதித்தான்.

அவள் சிறிது தூரம் சென்றபின் அவன் முகத்தில் அசட்டுக் குறி தோன்றிற்று. தனக்குள்ளே காட்டுத்தனமாய் முணுமுணுத்துச் சொன்னதாவது, "யார்

வாசித்தாலும் சரி; நான் மட்டும் அதை வாசிக்கப்போவதே யில்லை. அதோடு கூட வேறொருவரும் இதை வாசியாத படிக்கும் கண்டிப்பாய்ப் பார்த்துக்கொள்ளுவேன்" என்று உறுதியான தீர்மானத்தோடு தான் கட்டிக்கொண்டிருந்த சுவருக்குள் ஒரு கல்லுக்கடியில் அப்புஸ்தகத்தை வைத்துக் கட்டி, அது ஒரேயடியாய்த் தொலைந்தது என்ற நிச்சயத்தோ டிருந்தான்.

பல வருஷங்களுக்குப்பின் அந்த ஜில்லாவில் ஒரு பூமி அதிர்ச்சியுண்டாயிற்று. அதனால் பல கஷ்டங்களும் சொற்பச் சேதமும் ஏற்பட்டது. பூமியதிர்ச்சியால் பாதிக்கப் பட்ட அந்தக் கட்டடங்களின் சுவர்கள் அதிர்ச்சியால் பல வீனப்பட்டிருக்கிறதா இல்லையா வென்று சோதிக்க ஒரு அதிகாரி வந்தார். அவர் இந்த மனிதன் கட்டின அதே சுவருக்கு வந்து அதைப் பரிசோதித்தார். அவர் சோதித் துக்கொண்டிருக்கையில் அதில் ஒரு பெரும் பிளப்பு இருப்பதைக் கண்டார். சுவருக்குள் புஸ்தகம் இருப்பது போல் தோன்றினதைக் கண்டு ஆச்சரியப்பட்டார். பிளப் புள்ள இடத்திலுள்ள கல்லை ஜாக்கிரதையாக இறக்கி அப்புறப்படுத்திப் புஸ்தகத்தை வெளியே எடுத்தார். பல வருஷங்களுக்கு முன் அந்த அம்மாள் அக்கொற்றனுக்குக் கொடுத்த வேதப் புஸ்தகம் அதுவே.

இன்னும் இதைப்பற்றி அறிய வேண்டுமென்ற மிகுந்த ஆவலால் புஸ்தகத்தின் பக்கங்களை அதி விரைவாய்த் திருப் பித் திருப்பிப் பார்த்து விட்டு, வீட்டுக்குக் கொண்டுபோய் அதை வாசிக்கத் தீர்மானித்தார். புஸ்தகம் கண்டுபிடிக்கப் பட்ட விநோத முறையும், கொஞ்ச நேரத்தில் அவசர மாய்ப் புஸ்தகத்தில் பார்த்த விஷயங்களும் அதிலுள்ள செய்திகளை இன்னுமதிகமாய்ப் படிக்க வேண்டுமென்ற பேரவா மேற்கொண்டது. அன்று சாயந்தரமே அவர்

புஸ்தகத்தை ஊக்கமாய்ப் படிக்கத் தொடங்கினர். அவர் மனதுக்கும் இருதயத்திற்கும் அது வெளிப்படுத்திய விஷயங்கள் அவரை ஆட்கொண்டன. அதை வாசித்ததின் பயனாகச் சற்று நேரத்திற்குப் பின், நாம் ஒவ்வொருவரும் அறிய வேண்டிய முக்கியமான மூன்று பெரிய சத்தியங்களைக் கண்டுபிடித்தார். முதலாவது தாம் ஒரு பாவி என்றும் *எல்லாரும் பாவம் செய்திருக்கிறார்கள். இரண்டாவது பாவிகளுக்கு ஒரு இரட்சகர் இருக்கிறார் என்றும் † பாவிகளை இரட்சிக்க கிறிஸ்து இயேசு உலகத்தில் வந்தார். ‡ கிறிஸ்துவானவர் வேதவாக்கியங்களின்படி பாவங்களுக்காக மரித்தார். மூன்றாவது, இயேசு கிறிஸ்துவில் விசுவாசமாயிருந்தால் தாம் இரட்சிக்கப்படுவார் என்றும், § கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசி அப்பொழுது நீயும் உன் வீட்டாரும் இரட்சிக்கப்படுவீர்கள். இந்த அதிகாரி அறிந்த சத்தியங்கள் தேவ வசனத்தின் மூலமாய் நமக்குத் தெரிய வரும். அதாவது தேவன் நமது இரட்சிப்புக்குத் தேவையான எல்லாவற்றையும் இயேசு கிறிஸ்து மூலமாய்ச் செய்து முடித்திருக்கிறார்.

அவருடைய இந்த இலவசமான ஈவை ஏற்றுக்கொண்டு கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை நமது இரட்சகராக முற்றிலும் விசுவாசிப்பதே நமது பாகம்.

உடனே அந்த அதிகாரி முழங்கால் படியிட்டு, தம்மை மீட்கும்படியாக மரித்த இயேசு நாதருக்கு நன்றி செலுத்தி, தாம் புதிதாகக் கண்டு பிடித்த ரட்சகரின் ஊழியத்துக்கென்று தன்னை அர்ப்பணம் செய்தார்.

---

* ரோமர் : 3 23;. † 1 தீமோத்தேயு. 1 : 15;.
‡ 1 கொரிந்தியர் 15 : 3. § அப்போஸ்தலர் 16 : 31.

பாவம் மன்னிப்படைவதால் உண்டாகும் சந்தோஷத்தையும், சமாதானத்தையும், தேவனுக்கு ஊழியஞ் செய்வதால் வரும் ஆனந்தத்தையும் பிறர் அறியவேண்டுமென்பதையே பெரிதும் விரும்பினர்.

கொஞ்ச நாட்களுக்கப்பால் அவர் ஊர் ஊராகச் சென்று புஸ்தகங்களை விற்கும் வியாபாரியானர். தேவ வசனமாகிய சத்திய வேதப் புஸ்தகங்களை நாடு, நகரம், கிராமங்களுக்கு எடுத்துச் சென்று அங்குள்ளவர்களுக்குக் கொடுத்துக் காலங்கழித்தார்.

ஒரு நாள் தம் புஸ்தகக் கட்டுடன் போய்க் கொண்டிருக்கையில் ஒரு கொற்றன் ஒரு சுவரைக் கட்டிக்கொண்டிருக்கிறதைப் பார்த்தார்.

அவன் வேலை செய்துகொண்டிருந்த இடத்திற்கு அவர் போய் நின்று, வெகு சொற்பக் கிரயத்துக்கு ஒரு வேதப் புஸ்தகம் வேண்டுமா வென்று கேட்டார். கொற்றன் முகத்தைச் சுளித்துக்கொண்டு ஒரு காலம் தன் வசம் ஒரு வேதப் புஸ்தகமிருந்ததாகவும், அதை ஒருவரும் ஒருகாலும் கண்டு பிடிக்கமுடியாத இடத்தில் வைத்துவிட்டதாகவும் பதில் அளித்தான். அந்தப் புஸ்தக வியாபாரி அவனைப் பார்த்து "கேள்! உன்னுடைய பேர் எனக்குத் தெரியும், இதோ உன்னுடைய வேதப் புஸ்தகம்" என்று சொல்லி, தம்முடைய சேப்பிலிருந்து புஸ்தகத்தை எடுத்து, கொற்றன் கையில் கொடுத்தார். அவனுக்குண்டாகும் வியப்பை நீங்களே சற்றுச் சிந்தித்துப்பாருங்கள். இந்த நிகழ்ச்சியின் முடிவு என்னவெனில், அந்தக் கொற்றன் இப்போது அதை வாங்க மனமுள்ளவனாய் மாத்திரமல்ல வாசிக்க மிகவும் ஆவலுள்ளவனானன். அந்தக் கொற்றனுடைய தோழன் அந்த வேதப் புஸ்தகத்தைத் தாம் படித்ததினால் தம் ஆத்துமாவுக்கும் ஜீவனுக்கும் உண்டான ஆச்சரியமான

மாறுதலைப்பற்றி அனுபவ சாட்சி சொன்னார். அந்த வேதப் புஸ்தகம் முன்னமே அக்கொற்றனுக்குரியது. திரும்பவும் அவனுக்கு ஆச்சரியமான வழியாய்க் கிடைத்தது. அதனால் அவனுக்குள் பலத்த கிரியை நடந்தது. அந்தக் கொற்றன் தன் தீர்மானத்தை நிறைவேற்றினான். புஸ்தகத்தை வாசித்ததின் பயனாகக் கொஞ்ச நாட்களுக்குள்ளாக இயேசு இரட்சகரண்டை வந்தான். முன் ஒரு காலத்தில் அவன் நிந்தித்த அதே புஸ்தகம் இப்போது அவனுக்கு விலையேறப் பெற்ற பொக்கிஷமாயிற்று.

தனக்கென்று ஒன்றும் வைக்காமல் தன் ஜீவியம் முழுவதையும் தேவனுக்கு ஒப்புவித்தான். அவர் எங்கே போகச் சொன்னாரோ, எதைச் செய்யச் சொன்னாரோ, அதை யெல்லாம் செய்ய மனமுள்ளவனானான். சிறிது காலத்திற்குள் ஊக்கத்தோடும் உற்சாகத்தோடும் தேவ ஊழியத்துக்குத் தன்னை ஆயத்தப்படுத்திக்கொண்டு இயேசு நாதரை அறியாத பிற நாட்டுக்குத் தேவ ஊழியனாகச் சென்றான். இந்த அன்பின் அலுவல்களில் தன் இரட்சகருக்காக உண்மையாக உழைத்தான்.

இதை வாசிக்கும் அன்பா, வேதப் புஸ்தகத்தை வாங்கி வாசி. ஏனெனில் அது தேவனுடைய வசனம்; அது என்றென்றைக்கும் நிற்கிறதும், ஜீவனுள்ளதும், அழியாததுமானது. இலவசமான இரட்சிப்பின் ஈவை, இந்த இரண்டு மனிதரும் ஏற்றுக்கொண்டதுபோல், நீயும் ஏற்றுக்கொண்டால், நீயும் நித்திய ஜீவனை அடைந்து, என்றென்றைக்கும் நிற்கிறதும் ஜீவனுள்ளதுமான ஆசீர்வாதத்தையும் சந்தோஷத்தையும் பெற்று வாழ்வாய்.

# 3 செம்மானின் சந்தோஷம்

அநேக ஆண்டுகளுக்கு முன் யாசகனொருவனுக்கு வேத நூல் ஒன்று கொடுக்கப்பட்டது. அவனுடைய ஜாதியாரில் அநேகருக்கு வாசிக்கத் தெரியாமலிருந்தபோதி லும் இவனுக்குப் படிக்கத் தெரிந்திருந்தது. அவன் அலைந்து திரிந்த பட்டணங்களிலும் கிராமங்களிலும் இப்புஸ்தகம் அறியப்படாமலிருந்தது. ஆகையால் அவன் தனக்குப் பணம் கொடுக்க மனமுள்ளோருக்கு, அதினின்று ஏதாவது ஒரு பகுதியை வாசித்து, கிடைக்கும் பணத்தால் தன் சொற்ப வருமானத்தை அதிகரித்துக்கொள்ளலா மென்று நிர்ணயித்திருந்தான்.

இவன் ஒருநாள் மரமிதியடிகளைச் செய்கிற ஒரு வயோதிபச் செம்மானுடைய கடைக்குமுன் வந்து நின்று அவனிடம் தருமம் கேட்டான்.

**செம்மான் :** என்னிடத்திலா தருமம் கேட்கிறாய்? உன்னைப்போலவே நானும் வறுமையுள்ளவன்தான்.

**யாசகன் :** சரி இருக்கட்டும், தருமங் கொடுக்க இஷ்டமில்லையானால் முக்கால் துட்டாவது கொடும். நான் உமக்கு வேதத்திலிருந்து ஒரு அதிகாரத்தை வாசிக்கிறேன்.

**செம்மான் :** எதிலிருந்து ஒரு அதிகாரம்?

**யாசகன் :** வேதத்திலிருந்து.

**செம்மான் :** அது என்ன புஸ்தகம்? அதைப்பற்றி முந்திக் கேள்விப்படவில்லையே என்றான்.

**யாசகன் :** அது தேவனைக் குறித்துச் சொல்லும் புத்தகம். அப்புஸ்தகத்தின் விஷயத்தை அறிய ஆவ லுற்ற செம்மான், காலணாவை யெடுத்து யாசகனிடம்

கொடுத்தான். அவன் தன் நூதன நூலைத் திறந்து கடைக்கு முன் உட்கார்ந்து வாசிக்கத் தொடங்கினான். அருளும் உண்மைப் பொருளும் நிறைந்த அவ்வார்த்தைகளைப் புதிதாகக் கேள்வியுற்ற கிழவன் களிப்புடன் கவனிக்கலானான். இயேசுநாதருக்கும் பக்தியுள்ள ஒரு அதிகாரிக்குமிடையே நடந்த சம்பாஷணையின் விருத்தாந்தம் அவனுடைய மனதில் ஆழமாய்ப் பதிந்தது. தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார் என்ற வார்த்தைகள் அவன் இருதயத்தைக் குத்தின. அவரை விசுவாசிக்கிறவன் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படான். விசுவாசியாதவனோ, தேவனுடைய ஒரே பேறான குமாரனுடைய நாமத்தில் விசுவாசமுள்ளவனாயிராதபடியினால் அவன் ஆக்கினைத் தீர்ப்புக்குட்பட்டாயிற்று என்ற இவ்வார்த்தைகளை வாசிப்போன் முடிக்கிறதற்குள்ளாக, வயோதிபன் இன்னும் கேட்கவேண்டுமென்ற அவாவுடன், வாசித்துக்கொண்டே போ! வாசித்துக்கொண்டே போ! என்று கத்தினான்.

யாசகன்: இல்லை, இல்லை, காலணாவிற்கு ஒரு அத்தியாயம்தான்.

உடனே செம்மான் வேறொரு நாணயத்தை எடுத்துக் கொடுத்தான். அடுத்த அத்தியாயமும் வாசிக்கப்பட்டது. ஓர் ஊர்க்கிணற்றண்டையில் நேர்ந்த நமது ரட்சகரது இன்பமான சரிதையை மட்டுக்கடங்கா மகிழ்ச்சியுடன், அவன் கேட்டான்

இந்தத் தண்ணீரைக் குடிக்கிறவனுக்கு மறுபடியும் தாகமுண்டாகும். நான் கொடுக்கும் தண்ணீரைக் குடிக்கிறவனுக்கோ தாகமுண்டாகாது, நான் அவனுக்குக் கொடுக்கும்

தண்ணீர் அவனுக்குள்ளே நித்திய ஜீவ காலமாய் ஊறுகிற நீரூற்றாயிருக்கும், என்ற திவ்விய வார்த்தைகளை முதல் தடவையாகக் கேள்வியுற்ற இவனுக்கு முன்னொரு காலமும் உண்டாயிராத ஓர் உணர்ச்சி உண்டாயிற்று.

யோவான் சுவிசேஷத்தில் நான்காம் அதிகாரமும் வாசித்து முடிவடைந்தது. இன்னொரு காலனுமில்லாமல் யாசகன் அதற்கடுத்த அத்தியாயத்தை வாசிக்கப் போகிற தில்லை. என்ன செய்வது?

கிழவன் ஏழையானதால் துட்டுக் கொடுத்துக் கொண்டே யிருப்பதும் கூடாத காரியம். ஆகையால், அந்த ஆச்சரியமான புஸ்தகம் அவனுக்கு எங்கிருந்து கிடைத்ததென்று செம்மான் கெஞ்சிக்கேட்டான்.

யாசகன்: அறுபது மைல்களுக்கப்பாலுள்ள ஒரு பட்டணத்திலிருக்கிற பாதிரியாரிடமிருந்து பெற்றுக்கொண் டேன் என்று சொல்லிவிட்டுத் தன் வழியே போய் விட்டான்.

வாசித்தவனோடு வேதமும் சென்றது. ஆனால் திரு வசனங்களோ கேட்டவனுள்ளத்தில் பதிந்தன. அல்லும் பகலும் வயோதிபன் "தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ, அவன் கெட்டுப் போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு அவரைத் தந்தருளி இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார் என்ற வார்த்தைகளைத் தனக்குள்ளே சொல்லிக்கொண்டே யிருந்தான்.

யாசகன் போய் இரண்டு வாரம் சென்றபின், ஒரு வைகறையில் வயோதிபச் செம்மான் எழுந்து தன்னுடைய மகனை நோக்கி, இச்சிறு கடையை உன் வசம் ஒப்புவித்து விட்டு, நான் பாதிரியார் வசிக்கிற பட்டணத்துக்குப் போகிறேன், என்றான்.

**மகன் :** ஐயா! நீர் அதைப்பற்றி நினைக்கவே வேண்டாம்; அது அறுபது மைல்களுக்கப்பாலுள்ள அதிக தூரமான பயணமே.

**தகப்பன் :** என் மகனே, அது எனக்குத் தெரியும் எப்படியாவது போகவேண்டுமென்று தீர்மானித்து விட்டேன்.

அவனைப் போகாமல் தடுக்கும்படி பிரயத்தனப்பட்டதெல்லாம் பயன்படவில்லை. தீர்மானத்தின்படியே நெடுந்தூரமான அப்பயணத்தை ஆரம்பித்து, இறுதியில் சேர வேண்டிய பட்டணத்தை யடைந்தான். வேதப் புத்தகத்தை விற்கும் பாதிரியாருடைய கடையைத் தேடிக் கண்டு கொண்டான்.

அவன் புத்தகக் கடைக்குள் பிரவேசிக்கையில், பாதிரியார் அவனிடம், உனக்கு என்னவேண்டும்?

**வயோதிபன் :** தேவனைப்பற்றிக் கூறும் வேதப் புஸ்தகத்தை உங்களிடம் பெறலாமென்று நான் அறிந்ததினால் இவ்விடம் வந்தேன்.

**பாதிரியார் :** வேதாகமா உனக்கு வேண்டும்?

**வயோதிபன் :** ஆம்! ஐயா அதுதான்! அப்புத்தகம் ஒன்று என்னிடத்திலிருக்க விரும்புகிறேன்.

**பாதிரியார் :** என்ன கிரயத்துக்கு வேண்டும்.

**வயோதிபன் :** பெறுமதியா, ஐயா.

**பாதிரியார் :** வேதாகமப் புத்தகத்தை விலையில்லாமல் கொடுக்கவேமாட்டோம்.

**வயோதிபன் :** ஐயா! நான் விலை கொடுத்து வாங்க இயலாதவன். ஒரு யாசகனுக்கு ஒரு புத்தகம் நீங்கள்

கொடுத்தீர்கள் என்று என்னிடம் சொன்னுனே: நானும் அவனைப்போல் ஓர் ஏழைதான்.

**பாதிரியார்:** சிநேகிதா நீ எங்கேயிருந்து வந்தாய்?

**வயோதிபன்:** தன் ஊரின் பெயரைச் சொல்லிய போது, பாதிரியார் அது வெகு தூரத்திலுள்ள தென்றறிந்து, அவனிடம் நீ எப்படி வந்து சேர்ந்தாய் என்று கேட்டார்.

**வயோதிபன்:** கால் நடையாய் வந்தேன்.

**பாதிரியார்:** ஊருக்கு எப்படித் திரும்பிப் போவாய்.

**வயோதிபன்:** கால் நடையாய்த்தான் திரும்பிப் போவேன்.

**பாதிரியார்:** ஒரு வேதாகமத்தைப் பெற்றுக்கொள்ள நூற்றிருபது மைல்களுக்கதிகமாக நடக்க, வயது சென்ற நீ முயற்சித்திருக்கிருயே.

**வயோதிபன்:** ஆம் ஐயா; ஒன்றைப் பெற்றுக்கொண் டால் என் தகுதிக்கு மேலாகப் பிரதிபலன் அடைந்ததாகப் பாவித்துக் கொள்வேன்.

**பாதிரியார்:** காரியம் அப்படியானுல், இனி ஒரு போதும் வேதப் புத்தகத்தைக் கிரயமில்லாமல் கொடுக்கப் போவதில்லையானுலும், நிச்சயமாகவே உனக்கு ஒன்றைத் தருவேன். எவ்வளவு பருமனுள்ள புஸ்தகம் உனக்கு இஷ்டம்? பெரிய எழுத்துள்ளது வேண்டுமா? நீ கூடிய வரை நன்ருய் வாசிப்பாயென்று உத்தேசிக்கிறேன்.

**வயோதிபன்:** இல்லை ஐயா! எழுத்து வாசனை அறி யாதவன்.

**பாதிரியார்:** அப்படியானுல் வேதாகமத்தைக் கொண்டு போய் என்னதான் செய்யப்போகிருய்.

வயோதிபன்: ஐயரே! என் மகளுக்குப் படிக்கத் தெரியும். படிக்கத் தெரிந்த வேறே மூன்று ஆட்களும் எங்கள் கிராமத்திலிருக்கிறார்கள். தயவு கூர்ந்து வேதாகமத்தை எனக்குத் தாருங்கள் (கெஞ்சுகிறான் பல்லைக் காட்டி)

பாதிரியார் ஒரு வேதாகமப் புத்தகத்தை யெடுத்து அந்தக் கிழவனிடம் கொடுத்தார். அவன் அகமலர்ந்து நன்றி கூறிக் களிப்போடு அப்புத்தகத்துடன் தன் ஊர் நோக்கிச் சென்றான். தன்னுடைய சொந்த வீட்டை யடைந்த பின் அடிக்கடி சாயங்கால வேளையில் ஜனங்களைத் தன் செருப்புக் கடைக்கு அழைப்பான். வாசிக்கத் தெரிந்தோர் முறை முறையாய் வாசிக்கையில் மற்றெல்லோரும் கவனித்துக் கேட்பார்கள்.

வயோதிபச் செம்மான் வாசித்த எல்லாவற்றையும் அதிகக் கவனமாய்க் கேட்டு, அநேக பாகங்களை மனப் பாடம் பண்ணிக்கொண்டான். அவ்வசனங்கள் அவன் மனதில் பதிந்ததுமட்டுமல்லாமல், அவனுடைய இருதயத்தின் அடிமட்டும் ஊடுருவிச் சென்றன.

ஆறு மாதங்கழித்த பின், அவன் திரும்பவும் முன் சென்ற பட்டணத்திலுள்ள அப்பாதிரியாரிடமே சென்றான். பாதிரியார் அவனைக் கண்டவுடன் வியப்புற்று, வயது சென்ற என் நண்பா இவ்வளவு தூரமாக நீ திரும்பி வரக் காரணம் யாது? என வினவினர்.

வயோதிபன்: ஐயா! நான் முழுப்பாவி, பெரிய பாவி.

பாதிரியார்: நீ முழுப்பாவி யென்று யார் உனக்குச் சொன்னார்.

வயோதிபன்: ஐயா, நீங்கள் எனக்குத் தந்த அந்தப் புஸ்தகத்திலுள்ள வசனங்களே அப்படிச் சொல்லுகின்றன.

பாதிரியார்: உள்ளபடிதான, உள்ளபடிதான, அது சொல்லுகிறதென்ன?

வயோதிபன்: நான் என் ஜீவகாலமெல்லாம் நியாயக் கேடாய் ஜீவித்திருக்கிறேன் என்கிறது. பாவியாகிய நான் என்னுடைய வாழ்நாட்களிலெல்லாம் கன்னிமரியாளிடம் ஜெபித்து வந்திருக்கிறேன். எனக்கு ஒரு ரட்சகர் எப்படித் தேவையோ அதேவிதமாகவே அவளுக்கும் ஒரு ரட்சகர் தேவையென்று அப்புஸ்தகம் கூறுகிறது.

பாதிரியார்: அது உனக்கு எப்படித் தெரியும்.

வயோதிபன்: அவள் தன் இரட்சகராகிய தேவனில் களிகூர்ந்தாள். தன் ரட்சகர் என்று அப்புஸ்தகம் கூறு கிறதே. ஆகையால் என்னைப்போல் அவளுக்கும் ஒரு ரட்சகர் வேண்டியதாயிருந்ததே. உங்களுடைய மார்க்கம் வேதப் புஸ்தகத்துக்கு ஒத்திருக்கிறதாக நான் கேள்விப் பட்டேன். உங்களுக்கு விருப்பமிருந்தால் நானும் உங்கள் மார்க்கத்தானகப் பிரியப்படுகிறேன்.

பாதிரியார்: நண்பா! ஒருவனை எங்கள் சபையில் சேர்த்துக்கொள்வதற்குமுன் அவனைச் சோதித்தறிவோம்.

வயோதிபன்: பரிசோதனையா, ஐயா! எழுபது வயது என்றான். கிழவன் இன்னும் என் நாட்கள் எவ்வள வென்றறியேன், தாமதிப்பதற்குக் காலம் இல்லையே, ஐயா.

உடனே பாதிரியார் தம் சபையின் மூப்பர்களை வர வழைத்து அவர்கள் முன்னிலையில் அவனிடம் பல கேள்வி களைக் கேட்கலானார்.

பாதிரியார்: ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவைப் பற்றி உனக்கு என்ன தெரியும்.

வயோதிபன்: * அந்த வார்த்தை மாம்சமாகி, கிருபை யினாலும் சத்தியத்தினாலும் நிறைந்தவராய், நமக்குள்ளே வாசம் செய்தார்; அவருடைய மகிமையைக் கண்டோம்.

---

* யோவான் 1 : 14;

பாதிரியார்: அவருடைய மரணத்தைக் குறித்து என்ன சொல்லுகிறாய்?

வயோதிபன்: * தேவனுடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி நம்மைச் சுத்திகரிக்கும்.

பாதிரியார்: கிறிஸ்துவை விசுவாசிக்கிறவர்களுக்குரிய உரிமைகள் யாவை?

வயோதிபன்: †கிறிஸ்து இயேசுவுக்குட்பட்டவர்களாயிருந்து ஆவியின்படி நடக்கிறவர்களுக்கு ஆக்கினைத் தீர்ப்பில்லை.

பாதிரியார்: இயேசுநாதரை விசுவாசிக்கிறவனுடைய கடமையைப்பற்றி என்ன சொல்லுகிறாய்?

வயோதிபன்: ‡ நீங்கள் உங்களுடையவர்களல்லவென்றும் அறியீர்களா? கிரயத்துக்குக் கொள்ளப்பட்டீர்களே; ஆகையால் தேவனுக்கு உடையவைகளாகிய உங்கள் சரீரத்தினாலும் உங்கள் ஆவியினாலும் தேவனை மகிமைப்படுத்துங்கள்.

பாதிரியார்: அன்பா, இவ்வார்த்தைகள் இருதயத்திலுள்ள உணர்ச்சியை வெளிப்படுத்துகின்றன. நீ தேவனாலேயே போதிக்கப்பட்டிருக்கிறாய். ஆகையால் நாங்கள் யாதொரு சந்தேகமுமில்லாமல் உன்னை எங்கள் சகோதரனாகவே வரவேற்கிறோம்.

இந்த வயோதிபச் செம்மான் வாயின் வார்த்தைகளாலும், ஜீவியத்தாலும், வேத வார்த்தையைக் கேட்டு விசுவாசிக்கிறதினாலுமுண்டாகும் பயன் என்னவென்பதைத் தெளிவாகக் காட்டினான்.

---

* 1 யோவான் 1 : 7. † ரோமர் 8 : 1;
‡ 1 கொரிந்தியர் 6 : 19, 20.

## 4. வெட்டு ஒன்று துண்டு இரண்டு.

சுமார் எழுபது வருஷங்களுக்கு முன் தேவநேசன் என்ற ஒரு தேவ பக்தனிருந்தார். அவர் ஊர் ஊராகவும், வீடு வீடாகவும் சென்று கடவுளுடைய மட்டில்லாத அன்பைப்பற்றி ஜனங்களிடத்தில் சொல்லி வந்தார். ஒரு நாள் அவர் ஒரு நாஸ்திகனுடைய வீட்டிற்கு வந்தார். அவனுடைய மனைவியோ தேவனிடத்தில் ஜெபம் செய்யும் வழக்கமுள்ளவள். விவாகமானது முதல் வீட்டில் வேதப் புஸ்தகமில்லாததால், அவரிடத்தில் தனக்கு ஒரு வேதப் புஸ்தகம் கொடுக்குமாறு கெஞ்சிக் கேட்டாள். அப்பக்தன் அவள் விருப்பத்திற்கிணங்கி அவளுக்கு ஒரு வேதப் புஸ்தகத்தைக் கொடுத்துவிட்டுத் தம் வழியே சென்றார்.

அவர் அதிக தூரம் செல்லுமுன் அவளுடைய புருஷன் வீட்டுக்குள்ளே வந்தான். வந்ததும் அவன் வேதப் புஸ்தகத்தைக் கண்டு ஒரு பார்வை பார்த்தான். அப்பார்வையில் அவன் கோபமெல்லாம் உருவாகியிருந்தன. புஸ்தகத்தை ஒரு பிடுங்கு பிடுங்கினான். ஒரு கையில் கோடரியையும் மற்றொரு கையில் வேதப் புஸ்தகத்தையும் பிடித்துக்கொண்டு வெளியே விறகுக் கிடங்குக்கு விரைந்து சென்று, வெட்டுக் கட்டையின்மேல் புஸ்தகத்தை வைத்து வெட்டு ஒன்று துண்டு இரண்டு என்றவாறு புஸ்தகத்தை இரண்டு துண்டாக வெட்டினான். இரண்டு துண்டுகளுடன் திரும்பவும் வீட்டுக்குள் வந்து, பரிகாசத் தொனியில் தன் மனைவியை நோக்கி இந்த வீட்டிலுள்ள ஆஸ்திகளெல்லாவற்றிலும் நீ பங்கு பெற உனக்குப் பாத்தியதை இருப்பதால், இதிலும் உன் பாகம் இதோ இருக்கிறது என்று சொல்லித் தான் இரண்டாக வெட்டின புஸ்தகத் துண்டில் ஒன்றைத் தன் மனைவிக்கு எதிரே வீசி எறிந்தான். மற்றப் பாதித் துண்டைத் தொழிற் கருவிகள்

வைக்கும் மாடக் குழியில் போட்டான். பல மாதங்கள் கழிந்தன. அச்சமுள்ள அவன் மனைவியால் ஜெபிக்க மாத்திரம் முடிந்ததே யல்லாமல், வேறொன்றும் செய்ய இயலவில்லை.

மழையோ பனியோ இருந்த ஒரு நாளில், செய்வதற்கு யாதொரு வேலையுமில்லாதிருந்ததினால் அந்த மனுஷன் வீட்டிலிருக்கையில் பொழுதைப் போக்குவதற்காக வாசிப்பதற்கு ஏதாவது அகப்படுமாவென்று சுற்றிலும் தேடிப் பார்த்தான். அவ்வீட்டிலிருந்த புஸ்தகங்கள் வெகு சொற்பமே. ஆகையால் அவன் மாடக்குழியிலிருந்த சில பழைய சமாச்சாரப் பத்திரிகைகளைத் தேடிக்கொண்டிருக்கையில் எதைக் கண்டுபிடித்தானென்று நினைக்கிறீர்கள்? முன்னமே அவன் சேதப்படுத்திய வேதப் புஸ்தகத்தின் மறு பாதியே அவன் கையிலகப்பட்டது. மந்தமாய்ச் சும்மாயிராவண்ணம் பொழுதைப் போக்க எண்ணியே அவன் அதை எடுத்தான். தற்செயலாகவோ, என்னமோ அவன் திறந்த இடம் கெட்ட குமாரனுடைய கதை வரும் பக்கமே. அவன் அதை முந்திப் பார்த்ததாக அவனுக்கு ஞாபகமில்லை. எளிதில் விளங்கும் கதையானமையால் அவனது மனதைக் கவர்ந்தது. வாசித்துக்கொண்டே போகையில் கதை முடியாமல் திடீரென்று பாதியில் நின்றுவிட்டது. கதை முழுவதையும் வாசித்து முடிக்கப் புஸ்தகத்தின் மற்றப் பகுதியும் அவனுக்குத் தேவையாயிருந்தது. அதைத் தன் மனைவியிடம் கேட்க மனதில்லாதிருந்த போதிலும் அதை எவ்விதத்திலும் கட்டாயமாய்க் கண்டு பிடிக்கவேண்டுமென்ற ஆவலால் எங்கேயாவது அகப்படுமோவென்று கடைக்கண்போட்டு அங்குமிங்கும் தேடினான். ஆனால் அந்தப் பழுதுபட்ட துண்டு வேதப் புஸ்தகத்தைப் பத்திரமான ஒரு இடத்தில் ஒளித்து

வைத்திருந்தாள். அவன் தேடினது வீணாயிற்று. ஏனெனில் அவனால் அதைக் கண்டுபிடிக்கமுடியவேயில்லை.

வெகு சீக்கிரத்தில் கதையின் முடிவை அறியவேண்டு மென்றிருந்த ஆவல் ஆணவத்தை மேற்கொண்டது. ஆகையால் தன் மனைவியிடம் சென்று தான் வெட்டி யெறிந்த மற்றப் பகுதியைக் கேட்டான். அவனுடைய வேண்டுதற் கிணங்க அவள் அதை அவனிடம் கொடுத் தாள். இரண்டு துண்டுகளையும் பொருந்த வைத்துக் கதை முழுவதையும் வாசித்து முடித்தான். ஒரு முறையல்ல பன்முறை படித்துப் பார்த்தான். அந்தக் கதையை வாசித்ததின் பலனைப்பற்றியும் சொல்லவேண்டுமோ?

வழி விலகிய இன்னொரு கெட்ட குமாரன்; பரம பிதாவின் பாதாரவிந்தத்தில் சரணடைந்தான். மனஸ்தாபப் பட்ட ஆத்துமா பரம பிதாவின் கரங்களில் அடைக்கல மானது. சத்தியத்திற்கு விரோதியும், இதுவரை தன் ஜீவிய காலத்தில் விசுவாசத்தை அழிக்க ஊழியஞ் செய்த அவிசுவாசியுமான ஒருவன் விசுவாச துரந்தரனானான்.

இதை வாசிக்கும் சிநேகிதனே, வெகு காலத்துக்கு முன் ஒரு ராஜா இருந்தார். அவர் கர்த்தருடைய வேதத் தைப்பற்றிச் சொன்னது என்னவென்றால், *அநேகமாயிரம் பொன் வெள்ளியைப் பார்க்கிலும், நீர் விளம்பின வேதமே எனக்கு நலம். ஆகையால் உனக்கும் இந்த அற்புதமான வேதப் புஸ்தகம் வேண்டாமா? அதில் ஏராளமான பொக்கிஷங்கள் அடங்கியிருக்கின்றன. தேவனுடைய ஆசீர்வாதத்தைப்பெற அதுவே வழி. ஏனெனில் †கர்த்தரின் ஆசீர்வாதமே ஐசுவரியத்தைத் தரும். அதனோடு அவர் வேதனையைக் கூட்டார்.

---

* சங்கீதம் 119 : 72; † நீதிமொழிகள் 10 : 22.

## 5. மனமாறிய மகன்.

[மமதையுள்ள மரவெட்டி ஒரு கதையை வாசித்து மகிழ்சியடைந்தான் என்று, 'வெட்டொன்று துண்டு இரண்டு என்னும் கதையில் வாசித்தோம் அடியில் வரும் கதை அதுவே. இரட்சகரான இயேசு கிறிஸ்து திருவுளம் பற்றின இக்கதையை வாசித்துப் பரம பிதாவாகிய ஆண்டவர் பேரன்பை அறிந்துகொள்க:—]

ஒரு மனுஷனுக்கு இரண்டு குமாரர் இருந்தார்கள். அவர்களில் இளையவன் தகப்பனை நோக்கி: தகப்பனே, ஆஸ்தியில் எனக்கு வரும் பங்கை எனக்குத் தரவேண்டும் என்றான்.

அந்தப்படியே அவர் அவர்களுக்குத் தம் ஆஸ்தியைப் பங்கிட்டுக் கொடுத்தார்.

சில நாளைக்குப் பின்பு, இளைய மகன் எல்லாவற்றையும் சேர்த்துக்கொண்டு, தூர தேசத்துக்குப் புறப்பட்டுப் போய், அங்கே துன்மார்க்கமாய் ஜீவனம் பண்ணி, தன் ஆஸ்தியை அழித்துப் போட்டான். எல்லாவற்றையும் அவன் செலவழித்த பின்பு, அந்தத் தேசத்திலே கொடிய பஞ்சமுண்டாயிற்று. அப்பொழுது அவன் குறைவுபடத் தொடங்கி, அந்தத் தேசத்துக் குடிகளில் ஒருவனிடத்தில் போய் ஒட்டிக்கொண்டான். அந்தக் குடியானவன் அவனைத் தன் வயல்களில் பன்றிகளை மேய்க்கும்படி அனுப்பினான். அப்பொழுது பன்றிகள் தின்கிற தவிட்டினாலே தன் வயிற்றை நிரப்ப ஆசையாயிருந்தான். ஒருவனும் அதை அவனுக்குக் கொடுக்கவில்லை.

அவனுக்குப் புத்தி தெளிந்தபோது, அவன் என் தகப்பனுடைய கூலிக்காரர் எத்தனையோ பேருக்குப் பூர்த்தியான சாப்பாடு இருக்கிறது, நானோ பசியினால் சாகிறேன். நான் எழுந்து, என் தகப்பனிடத்திற்குப் போய்: தகப்பனே, பரத்துக்கு விரோதமாகவும், உமக்கு முன்பாகவும் பாவஞ் செய்தேன். இனிமேல் உம்முடைய குமாரன் என்று சொல்லப்படுவதற்கு, நான் பாத்திரனல்ல. உம்முடைய கூலிக்காரரில் ஒருவனாக என்னை வைத்துக்கொள்ளும் என்பேன் என்று சொல்லி, எழுந்து புறப்பட்டு, தன் தகப்பனிடத்தில் வந்தான்.

அவன் தூரத்தில் வரும்போதே, அவனுடைய தகப்பன் அவனைக் கண்டு, மனதுருகி, ஓடி, அவன் கழுத்தைக் கட்டிக்கொண்டு, அவனை முத்தஞ் செய்தான்.

குமாரன் தகப்பனை நோக்கி: தகப்பனே, பரத்துக்கு விரோதமாகவும், உமக்கு முன்பாகவும் பாவஞ் செய்தேன், இனிமேல் உம்முடைய குமாரன் என்று சொல்லப்படுவதற்கு நான் பாத்திரன் அல்லவென்று சொன்னான்.

அப்பொழுது தகப்பன் தம் ஊழியக்காரரை நோக்கி: நீங்கள் உயர்ந்த வஸ்திரத்தைக் கொண்டு வந்து, இவனுக்கு உடுத்தி, இவன் கைக்கு மோதிரத்தையும் கால்களுக்குப் பாதரட்சைகளையும் போடுங்கள். நாம் புசித்து, சந்தோஷமாயிருப்போம். என் குமாரனாகிய இவன் மரித்தான், திரும்பவும் உயிர்த்தான்; காணமற்போனான், திரும்பவும் காணப்பட்டான் என்றார். அப்படியே அவர்கள் சந்தோஷப்படத் தொடங்கினார்கள்.

(லூக்கா. 15: 11-24).

நண்பா, இக்கதைகளை வாசித்த உனக்கு இயேசு பெருமான் சொல்வதாவது :—

ராகம்—கௌசிகை. ] [ ஆதி தாளம்.

பல்லவி

மகனே, உன் நெஞ்செனக்குத் தாராயோ? — மோட்ச
வாழ்வைத் தருவேன், இது பாராயோ?

சரணங்கள்

1. அகத்தின் அசுத்தமெல்லாம் துடைப்பேனே—பாவ
அழுக்கை நீக்கி யருள் கொடுப்பேனே.

2. உன்றன் பாவம் முற்றும் பரிகரிப்பேனே,—அதை
உண்மையாய் அகற்ற யான் மரித்தேனே.

3. பாவம் அனைத்துமே விட்டோடாயோ?—நித்ய
பரகதி வாழ்வை இன்றே தேடாயோ?

4. உலக வாழ்வினை விட்டகல்வாயே,—மகா
உவப்பாய்க் கதி ஈவேன்; மகிழ்வாயே.

5. உன்றன் ஆத்துமத்தை நீ படைப்பாயே,—அதில்
ஊக்கமாய் வசிக்க இடம் கொடுப்பாயே.

Printed at the Hilal Press, Tirunelveli—2-'49.

இவ்வைந்து சரித்திரங்கள் மெய்யாய் நிகழ்ந்தவை.
அவைகளில் அமைந்த ஆசிரியர் அடைந்த
வண்ணமாக, பாவம் போக்கும் ரட்சகரை
அறிந்து கொள்ளவும் நிலையான
பாக்கியத்தை இம்மையில்
அடைந்துக் கொள்ளவும்
ஆவலுள்ளோர்,

திருநெல்வேலி ஜில்லா, டோனாவூரிலிருக்கும்
தேவபக்தி அவர்களிடம் எழுதிக் கேட்டுக் கோள்க.

நட்சத்திரக் கூட்டம், டோனாவூர்
திருநெல்வேலி ஜில்லா
No. 291

விலை 3 அணா